மட்/ககு/பேத்தாழை விபுலானந்தா கல்லூரி
பல்தேர்வு வினாக்களின் தொகுப்புக்கள்
க.பொ.த. (உயர்தரம்) – 2020

அத்தியாயம் நான்கு (எடுப்பு முரண்பாடு)

எல்லா வினாக்களுக்கும் பொருத்தமான விடையினை தெரிவு செய்க.

பகுதி - 01

01. எடுப்பு முரன்பாட்டு சதுரத்தின்படி O எடுப்பு பொய்யாயின் முறையே A,E,I வகை எடுப்புக்களின் பெறுமதி

1. பொய், உண்மை, உண்மை
2. உண்மை, பொய், உண்மை
3. சந்தேகம், உண்மை, பொய்
4. உண்மை, பொய், சந்தேகம்
5. உண்மை, பொய். பொய்

02. ''பரீட்சைகள் கடினமானவை அல்ல'' என்பதன் எதிர்மறை

1. சில பரீட்சை கடினமானவை
2. எல்லாப் பரீட்சைகளும் கடினமானவை
3. எல்லாப் பரீட்சைகளும் கடினமானவை அல்ல
4. எந்த ஒரு பரீட்சையும் கடினமானதல்ல
5. சில பரீட்சைகள் கடினமானவை அல்லாதன அல்ல

03. பூரண முரண்பாடு என அழைக்கப்படுவது

1. மறுதலை
2. உபமறுதலை
3. எதிர்மறை
4. கீழ்திசைவழிப்பேறு
5. மேல்திசை வழிப்பேறு

04. A உண்மையாகவும், E பொய்யாகவும் வரும் போது அதற்குரிய I எடுப்பு முறையே

1. உண்மை, பொய்
2. பொய், உண்மை
3. உண்மை, உண்மை
4. சந்தேகம் மட்டும்
5. பொய் மட்டும்

05. தரவு உண்மையாக இருக்கும் போது முடிவு உண்மையாக இருக்கும் முரண்பாடு

1. மறுதலை
2. உப மறுதலை
3. எதிர்மறை
4. கீழ்திசை வழிப்பேறு
5. மேல்திசை வழிப்பேறு

06. எல்லா மாணவர்களும் புத்திசாலிகள் அல்ல என்பது பொய் ஆயின் சில மாணவர்கள் புத்திசாலிகள் ஆகும் என்பது பொய் ஆகும்

1. வாய்ப்பற்ற கீழ்திசைவழிப்பேறு
2. வாய்பான எதிர்மறை
3. வாய்ப்பான கீழ்திசைவழிப்பேறு
4. வாய்ப்பற்ற மறுதலை
5. வாய்பான உப மறுதலை

07. சில புத்திசாலிகள் பணக்காரர்கள் ஆவர் என்பது உண்மையாயின் எல்லா புத்திசாலிகளும் பணக்காரர்கள் அல்ல என்பதன் பெறுமானம்

1. உண்மை
2. பொய்
3. சந்தேகம்
4. பெறுமானம் கூறமுடியாது
5. யாவும் சரி

www.ikedu.lk

08. எடுப்பு முரண்பாட்டில் இருப்பியல் போலி ஏற்படுவது

1. இருப்பியல் எடுப்புக்களை அனுமானிப்பதால்
2. பூச்சிய வகுப்புக்களைக் கொண்ட எடுப்பை அனுமானிப்பதால்
3. உண்மைக்கு மாறான விடயங்களை அனுமானிக்கும் போது
4. உண்மைக்கு சார்பான விடயங்களை அனுமானிப்பதால்
5. யதார்த்தத்தில் ஏற்பற்றதான அனுமானமாக அமைவதால்

09. தரவு கொய்யாகவும், முடிவும் பொய்யாகவும் இருக்கும் முரண்பாடு

1. மறுதலை
2. மேல்திசைவழிப்பேறு
3. உப மறுதலை
4. எதிர்மறை
5. கீழ்திசைவழிப்பேறு

10. எல்லா மலர்களும் அழகானவை அல்ல என்பது உண்மையாயின் சில மலர்கள் அழகானவை ஆகும் என்பதன் பெறுமானம்

1. உண்மை
2. பொய்
3. சந்தேகம்
4. பெறுமானம் கூறமுடியாது
5. அனைத்தும் சரி

www.lkedu.lk

பகுதி - 02

எடுப்பு முரன்பாட்டை அடிப்படையாகக் கொண்டு சரியான விடை தருக.

01. இடைவெளி நிரப்புக.

1. I எடுப்பு உண்மையாயின் அதன் எதிர்மறை எடுப்பின் பெறுமானம் ..... ஆகும்.

2. அளவாலும் பண்பாலும் வேறுபட்ட இரு எடுப்புக்களுக்கிடையிலான தொடர்பு ..... ஆகும்.

3. எடுப்பு முரன்பாட்டில் அனுபவத்தில் இல்லாத ஒன்றை வாய்ப்புப் பார்க்கும் போது ..... போலி ஏற்படும்.

4. எல்லா பூக்களும் வாசமுடையவை அல்ல என்பதன் கீழ்திசை வழிப்பேறு ..... எடுப்பாகும்.

5. E எடுப்பின் எதிர்மறை ..... எடுப்பாகும்.

02. எடுப்பு முரன்பாட்டை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வாதங்களின் வாய்ப்பினைத் துணிக.

பகுதி - அ

1. எல்லா மலர்களும் அழகானவை அல்ல என்பது பொய்யாயின் சில மலர்கள் அழகானவை ஆகும் என்பது பொய் ஆகும்.

2. சில பறவைகள் பறக்கும்திறனற்றவை ஆகும். என்பது உண்மையாயின் எந்த பறவையும் பறக்கும் திறனற்றவை அல்ல என்பது சந்தேகம் ஆகும்.

3. அனைத்து விலங்குகளும் வீரமானவை அல்ல என்பது பொய் ஏனெனில் சில விலங்குகள் வீரமானவை ஆகும் என்பது உண்மையாவதால்

4. அநேகமான மாணவர்கள் புத்திசாலிகள் அல்ல என்பது பொய் எனின் குறைந்தளவான மாணவர்கள் புத்திசாலிகள் ஆவர் என்பது சந்தேகம் ஆகும்.

5. எல்லா பறவைகளும் வண்ணமயமானவை ஆகும். என்பது உண்மையாயின் எந்த பறவைகளும் வண்ணமயமானவை அல்ல என்பது பொய் ஆகும்.

பகுதி - ஆ

1. பூரண முரன்பாடு என்றால் என்ன என்பதை உதாரணங்களுடன் விளக்குக.

www.lkedu.lk